# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100) ; யூன் 2016

### தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அறிக்கை வெளியிடுகையில், தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. அமரா. சத்தரசிங்ஹ அவர்கள், 2016 யூனிற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின்மீது வருடம் பணவீக்கம் 6.4% ஆக இருந்ததெனத் தெரிவித்தார். உணவுப் பொருட்களின் மற்றும் உணவு அல்லாத பொருட்களின் பணவீக்க பங்களிப்பு முறையே 3.4% மற்றும் 3.1% உள்ளன. இதில் உணவு பொருட்களில் காய்கறிகள் மற்றும் பச்சை மிளகாய் பங்களிப்பு 2.0% ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மிக அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணாகும். 2015 ஒக்டோபரில் இருந்து தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்(அடிப்படை2013=100) இனை மாதாந்தம் 21 நாட்கள் இடைவெளியில் வெளியிடுகிறது..

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், 2016 யூனிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை வெளியிட்டுள்ளது. 2016 யூனிற்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 116.1 என கணிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த மாத (மே) சுட்டெண்ணான 113.7 உடன் ஒப்பிடுகையில் 2.4 சுட்டெண் புள்ளி மற்றும் 2.1 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. இது உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி 2.1% அதிகரிப்பினாலும் மற்றும் உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி 0.1% அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும். உணவுப் பொருட்களின் மாதாந்த அதிகரிப்பிற்கு காய்கறிகள் மற்றும் பச்சை மிளகாய் விலையுயர்வு காரணமாக இருந்தது.

மே 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 யூனிற்கான உணவுப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 2.1% அதிகரிப்பைக் காட்டுகிறது. கடந்த மாதம் (மே) உடன் ஒப்பிடும்போது மரக்கறி, பச்சை மிளகாய், அரிசி, உடன் மீன், சீனி, உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், மைசூர் பருப்பு, தேங்காய் எண்ணெய், கருவாடு, வெள்ளைப் பூண்டு என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே உணவுப் பொருட்களின் பெறுமதி அதிகரிப்புக்குக் காரணமாகும். எனினும் தேசிக்காய், தேங்காய், புளி, முட்டை என்பவற்றின் விலைகளில் கடந்த மாதம் (மே) உடன் ஒப்பிடும்போது விலை வீழ்ச்சி காணப்படுகிறது.

மே 2016 உடன் ஒப்பிடுகையில் 2016 யூனிற்கான உணவல்லாப் பொருட்களின் செலவுப் பெறுமதி, 0.1% அதிகரிப்பினைக் காட்டுகிறது. இது பிரதானமாக உணவல்லாப் பொருட்களின் பிரிவில் ‘உணவு விடுதியும் ஹோட்டல்களும்’, ‘வீட்டு வசதி, நீர், மின்சாரம், எரி வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ ‘உடையும் காலணியும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தனப் பராமரிப்பு’ என்பவற்றில் ஏற்பட்ட செலவுப் பெறுமதி அதிகரிப்பினாலாகும். மேலும் ‘தொடர்பாடல்’ பிரிவின் பெறுமதியில் கடந்த மாதத்துடன்(மே) ஒப்பிடுகையில் மிகச் சிறிதளவு அதிகரிப்புக் காணப்படுகிறது. எனினும் ‘மது பானங்கள், புகையிலை மற்றும் போதைவஸ்து’, ஆகிய உணவல்லாப் பிரிவின் செலவினப் பெறுமதியில் கடந்த மாதத்துடன்(மே) ஒப்பிடுகையில் வீழ்ச்சி காணப்படுகிறது ‘சுகாதாரம்’, ‘போக்குவரத்து’, ‘கேளிக்கை மற்றும் கலாச்சாரம்’, ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின்மீது வருடம் பணவீக்கம்% |
|---|---|---|---|---|
| **2015** | யூன் | 109.1 | 1.0 | 2.7 |
| | யூலை | 108.9 | -0.2 | 1.8 |
| | ஓகஸ்ட் | 108.4 | -0.5 | 1.9 |
| | செப்ரெம்பர் | 108.4 | 0.0 | 1.9 |
| | ஒக்ரோபர் | 109.2 | 0.7 | 3.0 |
| | நவம்பர் | 112.0 | 2.6 | 4.8 |
| | டிசம்பர் | 113.2 | 1.1 | 4.2 |
| **2016** | ஜனவரி | 112.0 | -1.1 | -0.7 |
| | பெப்ரவரி | 110.8 | -1.1 | 1.7 |
| | மார்ச் | 110.0 | -0.7 | 2.2 |
| | ஏப்ரல் | 111.6 | 1.5 | 4.3 |
| | மே | 113.7 | 1.9 | 5.3 |
| | யூன் | 116.1 | 2.1 | 6.4 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

தொ. இல.: 011-2147001 / 011-2147020